உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சோபகிருது வருடம் ஐப்பசி திங்கள் செப்டம்பர் 2023 | பூமி–08



## நீதி பிழைத்தால் நாடு பிழைக்கும்



நீதி நெறியைக் காப்பாற்ற வேண்டியது நியாயபூர்வமான ஒரு அரசின் கடமையாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் கடந்த பல வருட காலமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நீதி என்றும் இனத்துக்கு ஒரு நீதி என்றும் மதத்துக்கு ஒரு நீதி என்றும் சமூக நீதி நெறிகள் பிழைத்த காரணத்தினால் தான் இந்நாடு இன்று நிற்கதி நிலையில் இருக்கின்றது. அழகான இந்த நாடு அற்புதமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய நாடு இன ரீதியான முரண்பாடுகளாலும், நீதியற்ற முறையில் மக்களை வழிநடத்திய முறைமைகளாலும், அரசியல்வாதிகள் தங்கள் தேவைகளுக்காக இந்த

தொடர்ச்சி 02ம் பக்கம்

நாட்டை அடகு வைத்துக் கொண்டிருப்பதனாலும் பாரிய விளைவுகளை இலங்கை திருநாடு சந்தித்து இருக்கின்றது.

பல்லாயிரக்கனக்கானவர்களின் மரணத்திற்கு பின்பு கூட நீதி கிட்டவில்லை. நீதியை நிலை நாட்டுவதற்காக எத்தனையோ ஆணை குழுக்களை இந்நாட்டிலே நியமித்து விசாரணைகள் செய்த போதும் எந்தவிதமான நீதியான தீர்ப்புகளும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் தான் சமீபத்தில் இலங்கை வரலாற்றில் முல்லைத்தீவு நீதிமன்ற நீதவானின் ராஜினாமாவும் அதற்கான காரணமும் உலகத்தை ஆச்சரியப்படுத்தி உள்ளது. இலங்கையில் இன்றைய நிலையை உலகுக்கு வெளிக்காட்டி உள்ளது. இந்நிலையை தொடருமே ஆனால் இந்நாட்டின் மீது யார் தான் உதவ முன் வருவார்கள்? இந் நாட்டில் கௌரவமாக வாழ விரும்புகின்ற பலர் அவகௌரவப்படுத்தப்படுகின்ற போது அவர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறவே முற்படுவார்கள். ஒரு காலத்தில் தமிழர்களே இந்த நாட்டை விட்டு வெளியேறுகின்றவர்களாக இருந்தார்கள் இப்பொழுது சிங்கள மக்களும் இந்நாட்டை விட்டு வெளியேறுவதில் ஆர்வம் காட்டிக்கொண்டிருக்கின்றார்கள். இன் நாடு அறிவுலகத்தால் வறுமைப்பட போகின்றது. பொருளாதாரத்தால் வறுமையை சந்திக்க போகின்றது. நல்ல மனிதர்களினால் மனிதர்கள் இல்லாத ஒரு வறுமை இந்த நாட்டுக்கு ஏற்படப்போகின்றது. எனவே இந்த நாட்டினுடைய அசாதாரன சூழ்நிலையை தொடர விடுவார்களே ஆனால் மிக ஆபத்தானது.


**ஆசிரியர்**
கலாநிதி.செஞ்சொற்செல்வர்.
ஆறு.திருமுருகன்
**உதவி ஆசிரியர்**
திரு.ச.சந்தோஷன்
**வடிவமைப்பாளர்**
திரு.வ.குணநீதன்

இந்த நாட்டினுடைய அடிப்படை பிரச்சனை இனத்துக்கு இனம் வேறுபட்ட நீதி நெறிமுறைகளை கடைப்பிடித்தமையாகும். இதன் விளைவே இன்றும் பாரதூரமான விளைவாக மாற்றம் பெற்றிருக்கிறது. ஈழத்தமிழர்களை பொறுத்த வரை அவர்கள் பல லட்சம் பேர் வெளிநாடுகள் சென்று நிரந்தர வாழ்வு வாழ்கிறார்கள். இந்நாட்டிலிருந்து புறப்பட்டவர்கள் கூட வேறு நாடுகளில் அரசியல் உரிமை மற்றும் பிரஜாவுரிமையோடு அந்நாட்டு தேர்தலில் அவர்கள் பிரதிநிதித்துவம் பெறுகின்ற அளவுக்கு மாற்றம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள். ஆனால் இந்த நாட்டிலேயே வாழ்பவர்கள் நிலை மோசமாகிக் கொண்டே போகிறது. இது தொடர போகிறது போல் இருக்கின்றது. சொந்த நாட்டை விட்டு மக்கள் வெளியேறுவது என்பது அநாகரிகமானது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட. இதற்கு என்னதான் தீர்வு தரப் போகிறார்களோ பொறுத்திருந்து பார்ப்போம்.

கலாநிதி. செஞ்சொற்செல்வர்.
ஆறு. திருமுருகன்
சிவபூமி பத்திரிகை ஆசிரியர்

# சிவபூமியில் நெல் விதைப்பு

சிவபூமி அறக்கட்டளைக்கு சொந்தமான நாவற்குழி வயல், அரியாலை வயல், தனக்கிளப்பு வயல் என்பவற்றில் நெல் விதைப்பு ஆரம்பமாகியுள்ளது. எதிர்பார்த்துக் காத்திருந்த பருவ மழை ஆரம்பித்துள்ளதை அடுத்து, சிவபூமியின் அரவணைப்பில் உள்ள குழந்தைகளுக்கும், முதியவர்களுக்குமான உணவுக்குத் தேவையான நெல்லை தமது வயலிலேயே பெற்றுக்கொள்ளும் முயற்சியாக ஆண்டுதோறும் நெல் விதைப்பு நடைபெறுகிறது.
இயற்கைத் தெய்வம் காத்தருள வேண்டும் என்கிற நம்பிக்கையோடு எமது மண்ணின் சகல மக்களும் நெல் விதைப்பில் ஈடுபட்டு பஞ்சம் பசி அற்ற நிலையை உருவாக்க வேண்டும்.





# மனிதத்தை சிந்திக்க வைத்த நிகழ்ச்சி

மறைந்த அன்புக்குரிய சுந்தரம் திவாகலாலா அவர்களின் நினைவாக அவரது குடும்பத்தினர் 2023 செப்டெம்பர் 16 ஆம் திகதி மாலை 5.00 மணியளவில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின், கேட்போர் கூடத்தில், மனிதம் எனும் கருப்பொருளில் நடன நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பல்கலைக்கழக சத்திரசிகிச்சை பிரிவுக்குள் சிறுநீரக பகல்நேர பராமரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கான நிதி சேகரிப்பு இந்த நிகழ்வின் முதன்மை நோக்கமாகும்.










யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா, மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன், மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தின் உப பீடாதிபதி பேராசிரியர் எம்.நிர்மலன், சிவபூமி அறக்கட்டளையின் நிறுவனர் கலாநிதி ஆறு திருமுருகன், பேராசிரியர் மோகனதாஸ், கல்விமான்கள். ஆலோசகர்கள், கல்வி சாராதவர்கள், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் இந்த நிகழ்விற்கு மேலும் முக்கியத்துவம் சேர்த்தனர்.

எண்ணை தீபம் ஏற்றப்பட்டு பாரம்பரிய மற்றும் அடையாளமாக நிகழ்வு ஆரம்பமானது. பிரதம விருந்தினர், கௌரவ விருந்தினர், சிறப்பு விருந்தினர், தலைவர், மருத்துவ மாணவர் சங்கம், பல்வேறு நடனக் கலைஞர்கள் எண்ணெய் விளக்கை ஏற்றிவைத்தனர், ஏனெனில் இது நமது பாரம்பரியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசத்குணராஜா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அவரது நுண்ணறிவு உரையில், அவர் நன்மையின் மூன்று முக்கிய அம்சங்களை விளக்கினார், அதாவது தொண்டு, தியாகம் மற்றும் பக்தி.

இந்நிகழ்ச்சியில் சிவபூமி அறக்கட்டளையின் நிறுவுனர் கலாநிதி. ஆறுதிருமுருகன் சிறப்புரையாற்றினார். சுந்தரம் திவாகலாலாவை மனிதநேய விழுமியங்களில் ஆழமாக வேரூன்றிய கருணை உள்ளம் படைத்தவர் என்று பாராட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

மனிதநேயம் மற்றும் சமூக உணர்வு ஆகியவற்றின் கருப்பொருளுடன் ஒரு மயக்கும் கிளாசிக்கல் நடன நிகழ்ச்சி, மாலை முழுவதும் பார்வையாளர்களைக் கவர்ந்தது. சிந்தனையைத் தூண்டும் செய்திகள் நிறைந்த ஒரு மறக்கமுடியாத மாலையை உருவாக்கினர்.









## விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்



யாழ் பெரிய புலம் மகாவித்தியாலயத்தில் 22.09.2023 அன்று இடம்பெற்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கில் வளவாளராக கலந்து கொண்ட மருத்துவர். திரு. ரஜீவ் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய அமைப்பும் உருவாக்கப்பட்டது. அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்புடன் சிவபூமி மற்றும் துமி அமைப்புக்கள் முன்னெடுத்த மேற்படி நிகழ்வானது விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் கருத்திட்டத்தின் ஒரு அங்கமாகும்.





# கள்ளனின் நம்பிக்கை



அது ஒரு சின்ன கிராமம். அந்த கிராமத்திலே ஒரு கிரு'ணன் கோவில். அந்த கோவிலில் திருவிழா. அந்த கிராமத்து மக்கள் எல்லாம் அங்கே கூடி இருந்தாங்க. ஒரு கதை சொல்லற பாகவதர் கிரு'ணனின் அருமை பெருமையெல்லாம் கதையா சொல்லி கிட்டு இருந்தார். இந்த சமயம் பார்த்து ஒரு திருடன் ஊருக்குள்ள திருட வந்தான். இந்த ஊர்ல உள்ள அத்தனை பேரும், கோவில்ல இருக்காங்க. நமக்கு நல்ல வேட்டைதான். வீட்டுக்கு வீடு புகுந்து கண்ணுல அகப்பட்டதை சுருட்ட வேண்டியதுதான் அப்படின்னு திட்டம் போட்டு வீடு வீடா புகுந்தான் அவன் கெட்ட நேரம் ஒரு வீட்டுல கூட, உருப்படியா ஒன்னும் இல்லை. என்னடா இது... இந்த ஊர்ல எல்லா பயலும் பிச்சைகாரனா இருப்பான் போலிருக்கே. அப்படின்னு யோசிச்சு கிட்டே கோவில் பக்கம் வந்தான். அங்கே யாராவது ஒரு ஏமாளி பய சிக்காமலா போய்டுவான் என்பது அவன் எண்ணம்.

பாகவதர் சுவாரஸ்யமா கிரு'ணன் கதையை சொல்லிக்கிட்டு இருந்தார். குழல் ஊதும் கிரு'ணன் இருக்கானே.. கொள்ளை அழகு. அவன் கழுத்துல தங்க மாலை போட்டு இருப்பான். இடுப்புல பட்டையா ஒட்டியாணம் மாதிரி வைரம் பதிச்ச பெல்ட் போட்டு இருப்பான். காதுல வைர கடுக்கன். கையில தங்க காப்பு. கால்ல முத்து பதிச்ச தண்டை. அட அட அட அப்படியே கண்ணனை பார்க்க கண் கோடி வேண்டும். இப்படி... கண்ணன் அழகை வர்ணிச்சார் பாகவதர். இதை கேட்டான் திருடன். அவனுக்கு கண்ணன் யாருன்னு எல்லாம் தெரியாது. அவனுக்கு தெரிஞ்சது எல்லாம் திருட்டு வேலை மட்டும்தான்.

அடடா அந்த பாகவதர் யாரோ ஒரு பணக்கார வீட்டு பையனை பற்றி சொல்றார். அவன் யார் வீட்டு பையன்னு கேட்டு, நம் கை வரிசையை காட்ட வேண்டியதுதான். அப்படின்னு கதை முடியுற வரை காத்திருந்தான். கதை முடிஞ்சுது.. ஊர் மக்கள் எல்லாம் போன பிறகு, மெல்ல பாகவதர் பக்கம் வந்தான் திருடன். ரொம்ப நேரமா ... ஒரு பையனை பற்றி சொன்னிங்களே அவன் யார். எங்கே இருப்பான். உடனே சொல்லு. இல்லை உன்னை இந்த கத்தியாலேயே குத்தி கொன்னுடுவேன் அப்படின்னு மிரட்டினான்.

பாகவதருக்கு கை கால் எல்லாம் வெட வெடன்னு ஆரம்பிசுடிச்சு. கடவுளே இது என்ன சோதனை. நான் அந்த மாய கண்ணனை பற்றி அல்லவா கதை சொன்னேன். இந்த முட்டாள் திருடன் அதை உண்மைன்னு நம்பி வந்து கேட்கிறானே. அப்படின்னு யோசித்தவர்... அவனிடம் தப்பிக்க.... அதோ தெரியுதே சோலை, அந்த சோலை பக்கம் தான் அந்த கண்ணன் விளையாட வருவான். போய் பிடிச்சுகோன்னு சொல்லி அப்போதைக்கு தப்பிச்சுட்டார்.

திருடனை பொறுத்தவரை பாகவதர் சொன்னது உண்மைன்னு நம்பினான். கண்ணன் வருவான் அப்படின்னு சோலைல போய் ஒளிஞ்சு இருந்தான். அவன் நினைவு எல்லாம்... கண்ணன் எப்போ வருவான்... கண்ணன் எப்போ வருவான் என்பதாகவே இருந்தது. உண்மையா பாகவதர் சொன்ன மாதிரி கண்ணன் வந்தான். பாகவதர் சொன்ன மாதிரி நகை எல்லாம் போட்டு இருக்கானான்னு திருடன் பார்த்தான். உண்மைதான்... அவர் சொன்ன அத்தனை நகையும் கண்ணன் போட்டு இருந்தான்.

மெல்ல சின்ன கண்ணன் பக்கம் போய்... அடேய் தம்பி... உன் நகை எல்லாம் அழகா இருக்கு. அதை எனக்கு தருவியான்னு கேட்டான். கண்ணன் உடனே எல்லாத்தையும் கழட்டி கொடுத்துட்டான். நல்ல பையன்னு சொல்லிட்டு திருடன் நகையை எல்லாம் ஒரு மூட்டையா கட்டி எடுத்து கிட்டு பாகவதரை தேடி வந்தான். தன் வீட்டு வாசலில் இருந்த பாகவதர் தூரத்தில் வரும் திருடனை பார்த்துட்டார். அவருக்கு மறுபடியும் கை கால் எல்லாம் ஆட அரம்பிசுடிச்சு.

திருடன் போய் சோலைல பார்த்திருப்பான். கண்ணன் வந்திருக்க மாட்டான். அந்த கோபத்தோட வருவான். இவன் கிட்டே இருந்து எப்படி தப்பிக்கிறது அவனும் நம்மளை பார்த்துட்டான் அப்படின்னு யோசிக்கும் போது, திருடன் பக்கத்துல வந்து ரொம்ப நன்றி ரொம்ப நாளைக்கு பிறகு நல்ல வேட்டைன்னு சொன்னான். பாகவதருக்கு பயம் போயிடிச்சு. என்னப்பா சொல்றேன்னார். உண்மைதான் நீங்க சொன்ன மாதிரி சின்ன கண்ணன் வந்தான் என்ன அழகு என்ன சிரிப்பு அவனை அப்படியே பார்த்துகிட்டே இருக்கலாம் போல இருக்கு. நான் கேட்டதும் எந்த மறுப்பும் சொல்லாம அப்படியே கழட்டி கொடுத்துட்டான் இதோ அந்த நகை எல்லாம் இருக்கு உனக்கு கொஞ்சம் பங்கு தரவான்னு கேட்டான்.

பாகவதரால நம்பவே முடியலை. என்ன சொல்றேன்னார். அவனை பார்த்தியான்னு கேட்டார். ஆமாம் சாமி. உங்களுக்கு சந்தேகம் இருந்தா என் கூட வாங்க அந்த சோலைலதான் இன்னும் விளையாடி கிட்டு இருக்கான். வாங்க கட்டுறேன்னு சொன்னான். நம்பவே முடியாம பாகவதர் அவன் கூட போனார். சோலை கிட்டே வந்ததும் அதோ
பாருங்க சின்ன கண்ணன். நீல வண்ணன் விளையாடிகிட்டு இருக்கான் பாருங்கன்னு சொன்னான். பாகவதர் கண்ணுக்கு எதுவுமே தெரியலை. சிரிப்பு சத்தம் மட்டும் கேட்டது. இது என்ன சோதனை... என் கண்ணுக்கு தெரியலை. கேவலம் இந்த திருடன் கண்ணுக்கு தெரியுறியா கண்ணானு பாகவதர் அழவே ஆரம்பிச்சுட்டார். அப்போ அந்த திருடன் கையை பிடிங்கோனு ஒரு குரல் கேட்டது. உடனே அவன் கையை பிடிச்சார். நீல வண்ண கண்ணன் அவர் கண்ணுக்கு தெரிஞ்சார்.

கண்ணா... இது தர்மமா... என் நினைவு தெரிந்த நாள் முதல் உன் கதையை சொல்றேன். அதை தவிர வேற எதுவுமே எனக்கு தெரியாது. இது வரை எனக்கு தரிசனம் தராத நீ.... இந்த திருடன் கண்ணுக்கு தெரிகிறாய். அவன் கையை பிடித்த பிறகுதான் நீயே எனக்கு தெரிந்தாய்.

பாகவதரே உங்கள் வருத்தம் புரிகிறது. ஆனால் இத்தனை ஆண்டு காலம் என் கதையை சொன்னாலும், நான் வருவேன் என்ற எண்ணம் உங்களுக்கு வந்ததே இல்லை. நான் இருக்கேனா இல்லையா என்பதே உங்களுக்கு சந்தேகம்தான். ஆனால் இந்த திருடன் அப்படி இல்லை. நான் இருக்கேன் என்று நம்பினான். நான் வருவேன் என்று நம்பினான். அதனால் வந்தேன். கடவுள் பத்தி என்பதே நம்பிக்கைதான் என்று சொல்லி விட்டு கண்ணன் மறைந்து விட்டான்.

## சாதனை மாணவிகளுக்கு கௌரவம்





யா/இராமநாதன் கல்லூரி மாணவர்கள் நீண்டகால இடைவெளிக்குப் பிறகு உயர்தர பரீட்சையில் மகத்தான சாதனைகளை புரிந்திருக்கிறார்கள். இப்போது வெளியாகியுள்ள பெறுபேறுகளின் படி மருத்துவத்துறை, பொறியியல் துறை, வர்த்தகத்துறை, கலைத்துறை ஆகியவற்றுக்கு 22 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இதனை பாராட்டி பழைய மாணவர்களால் பாராட்டு விழா நடாத்தப்பட்டு, சாதனை மாணவிகள் கௌரவிக்கப்பட்டனர்.





## கோணேச்சரத்துக்காக லண்டனில் உருவாகும் பெரிய மணி

திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலனசபையின் வேண்டுதலுக்கு அமைய திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்கு லண்டனில் பெரிய மணி உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திருவாளர். சீலன் அவர்களின் ஏற்பாட்டில் பல அன்பர்கள் இணைந்து இத்திருப்பணியை ஆரம்பித்திருக்கிறார்கள். பாடல் பெற்ற திருத்தலமான திருக்கோணேச்சரத்தின் எட்டுத்திக்கிலும் இந்த மணியின் நாதம் ஒலிக்க இருக்கிறது.



# யாழ்ப்பாணம் வந்த தரும புர ஆதீன சுவாமிகள்



தருமபுரம் ஆதின 27வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகள் ஒரு நாள் பயணமாக சென்னையில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணம் பலாலி விமான நிலையம் சென்றடைந்தார். அவருக்கு விமான நிலையத்தில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. சிவபூமியின் திருவாசக அரண்மனைக்கும் வருகை புரிந்து, பூசை வழிபாடுகளை மேற்கொண்டார். தொடர்ந்து நல்லூர் கந்தசாமி கோயில் தேரோட்டத்தில் பங்கேற்றதோடு, குரு மகா சன்னிதானம் அவர்கள் ஈழத்தின் முக்கிய திருத்தலங்களான மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலுக்கும் வருகை புரிந்து வழிபாடுகளையும் அங்கே இருந்த அடியவர்களுக்கு ஆசிகளையும் வழங்கினார்.



# சிவபூமியில் மஹாளயம்

சிவபூமி முதியோர் இல்லத்திலிருந்து இறைபதம் அடைந்தவர்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல வளாகத்தில் உள்ள ஆலயத்தில்
மஹாளயம் சாரந்த பூசைகள் பக்தி பூர்வமாக இல்லத்து முதியவர்களின் பங்குபற்றலோடு நடைபெற்றது.



சிவபூமி மனவிருத்திப் பாடசாலை மாணவர்கள் உலக சிறுவர் தினத்தை மகிழ்ச்சியோடு பாடசாலையில் கொண்டாடினர்.



கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நாள் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் நடைபெற்றதோடு முதியவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.



# ஈழத்து கலைஞருக்கு தபால் தலை வெளியீடு

கடந்த 2018ம் ஆண்டு சிவத்தமிழ் செல்வியின் உயர் விருது பெற்ற எமது மண்ணின் சங்கீத கலாபூசணம் ஏ.மு நடராஜா அவர்களை கௌரவித்து, 25 ரூபா பெறுமதியான தபால் தலை வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.



சங்கீத பேராசான் ஏ.மு நடராஜா அவர்கள் கும்பழாவளை பிள்ளையாரை பேறாக கருதி வாழ்ந்தமையால் கீர்த்தியோடும் மாறாத பண்பாட்டு விழுமியங்களோடும் இசைக்கு பெருந் தொண்டு ஆற்றிய பெருமயினைப் பெற்றார்.

85 வயதிலும் தனது இசைப் பயணத்தை சிறிதும் தொய்வின்றி தொடரும் இவர் பல மாணவர்களை இசைத்துறையில் உத்தமர்களாக வளர்த்தெடுத்தார். ஆயிரம் அரங்கு கண்ட இசையாளர் என்ற சிறப்புடன் எமது பிரதேசத்திற்கு பெருமை தேடித் தந்த உத்தமர் ஏ.மு நடராஜா அவர்கள் ஆவர்.




## இதய அஞ்சலி



திரு. கருணாகரன் (இளைப்பாறிய அதிபர்,திருக்கோணமலை) அவர்களின் பாரியார் னுச புனிதா கருணாகரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். திருக்கோணமலையில் சிவபூமி பணிகளை நிறைவேற்றுவதில் உதவிய உத்தம ஆன்மா சிவப்பேறு அடைய பிரார்த்திக்கிறோம். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு சிவபூமி குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்கள்.

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் நாள் சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் நடைபெற்றதோடு முதியவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.





## இதய அஞ்சலி



எமது சிவபூமி அறக்கட்டளையின் முதலாவது கட்டுமானமான மனவிருத்தி குன்றிய சிறார்களின் பாடசாலைக்கான கட்டடத்திற்கு கட்டட ஒப்பந்தகாரராக செயற்பட்ட மதிப்புக்குரிய தேசகீர்த்தி ச.ஆறுமுகநாதன்( உபதலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்) அவர்கள் 26.09.2023 அன்று சிவபதமடைந்தார். தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் உட்பட பல இடங்களில் அன்னார் செய்த அறப்பணிகளும் சமயப்பணிகளும் காலம் உள்ளவரை அவர் நினைவுகளை சுமந்து நிற்கும்.

பல வழிகளிலும் பலருக்கும் உதவிய உத்தம ஆன்மா சிவப்பேறு அடைய பிரார்த்திக்கிறோம். அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு சிவபூமி குடும்பத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்கள்.

# மலையகத்தில் சிவபூமியின் சிறுவர் தினம்

கண்டி கலகா சிவபூமி ஆச்சிரமத்திலும் மழலைச் செல்வங்களோடு சர்வதேச சிறுவர் தினம் கொண்டாடப்பட்டது. பரிசில்களும் வழங்கப்பட்ட மேற்படி நிகழ்வில் மலையகத்தைச் சேர்ந்த பல சிறுவர்கள் பங்கு பெற்று மகிழ்ச்சியாக அன்றைய பொழுதை களித்தனர்.






## கொக்குவில் இந்துவிலும் போதைப்பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு



அபயம் அறக்கட்டளையின் நிதிப் பங்களிப்புடன் சிவபூமி மற்றும் துமி அமைப்புக்கள் முன்னெடுத்துவரும் விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர் கருத்திட்டத்தின் கீழ்
கொக்குவில் இந்துக் கல்லூரியில் 03.10.2023 அன்று இடம்பெற்ற போதைப்பொருள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கில் வளவாளராக கலந்து கொண்ட மருத்துவர். திரு. ரஜீவ் மாணவர்களுடன் கலந்துரையாடினார். பாடசாலை மாணவர்களையும் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய அமைப்பும் உருவாக்கப்பட்டது. மாணவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களும் வழிகாட்டுதல்களும் மேற்படி நிகழ்வில் வழங்கப்பட்டது.










# துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் சாதனை


சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டியால் ஆரம்பிக்கப்பட்ட தெல்லிப்பளை துர்க்காபுரம் மகளீர் இல்லம் பல பெண் பிள்ளைகளுக்கு வாழ்வளித்து வருகிறது. அந்தவகையில் இந்த வருடம் துர்க்காபுரம் மகளீர் இல்லத்தை சேர்ந்த பிள்ளைகள் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்றுப் பல்கலைக்கழகம் செல்லத் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் மூவர் 3யு பெற்றுச் சாதனை படைத்துள்ளார்கள்.





# யாழில். காந்தியின் 154 ஆவது ஜனதின நினைவேந்தல்











# நூல் வெளியீடு

முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி அவர்களின் படைப்புகளும் பதிவுகளும் நூல் வெளியீடு 08.10.2023 அன்று நடைபெற்றது.





# மாணவர்களுக்கு ஆசி வழங்கல் வைபவம்

13.10.2023 அன்று நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஆசி வழங்கும் நிகழ்வில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களும் நீர்வை மயூரகிரிக் குருக்கள் அவர்களும் யாழ்ப்பாண கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சசிக்குமார் அவர்களும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஆசி வழங்கினார்கள்.







# சாதனையாளர்களுக்கு கௌரவம்

சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் பத்துப் பேருக்கு, சிவபூமி முதியோர் இல்லத்தில் வசிக்கும் அன்னையொருவர் தனது உறவினர் மூலம் தாலிக்கொடியை விற்றுத் தங்கச்சங்கிலிகள் வழங்கினார். மகளிர் இல்ல அதிபர் திருமதி.சிவமலர் அனந்தசயன் பிள்ளைகளுக்கு அத் தங்கச் சங்கிலிகளை அணிந்து சிறப்பித்தார்.





# இதய அஞ்சலி




கனடாவில் சைவ சித்தாந்த மன்றத்தை நிறுவி, சைவநீதி என்ற பெயரில் மாதாந்த மலரினை வெளியிட்டு,பல்வேறு சமய நிகழ்சிகளை வாரந்தோறும் நடாத்திய சிவநேயச்செல்வர் திரு.தி.விசுவலிங்கம் காலமானார்.விஞ்ஞானப்பட்டதாரியான இவர் அறுபதுகளில் ஸகந்தவரோதயக்கல்லூரியில் ஆசிரியப்பணியாற்றியவர். துர்க்காபுரம் மகளிர் இல்லவளர்ச்சிக்கு பல தடவை உதவியவர்.

# ஈழத்தில் சொல்வேந்தர்

தென்னிந்தியாவின் பிரபல பேச்சாளர் சொல்வேந்தர் திரு. சுகிசிவம் அவர்கள் யாழ்ப்பாணம் விஜயம் செய்த வேளை சிவபூமி அரும்பொருட் காட்சியகத்திற்கும் வருகை தந்தார். ஈழத்தின் வாழ்வியல் வரலாற்றை சுமந்து நிற்கும் பொருட்களை ஆர்வத்துடன் பார்வையிட்டார்.








ISBN - 978-955-7420-00-4